# தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலைத்துறை
திருநெல்வேலி வட்டம், திருநெல்வேலி–2
சிட் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்த அறிவிப்பு எண் 7/2004–05/வ1 நாள் 3.12.2004

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ) திருநெல்வேலி அவர்களால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள், ரிசர்வ் லைன் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி–2ல் உள்ள அவரது அலுவலகத்தில் 30.12.2004 அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) வரவேற்கப்படுகிறது. இவ்விதம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே 3.15 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் முன்னிலையில் வட்ட அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூபாய் லட்சத்தில் | முன் வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி படிவம் விலை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்குமிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **<u>முதல் அழைப்பு</u>**<br>**<u>ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்தும் திட்டம் 2004–05</u>**<br>**<u>திருநெல்வேலி (நெ) கோட்டம்</u>** | | | | |
| 1 | பாளையங்கோட்டை (நெ) உட்கோட்டத்திற்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் (ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம்) – (இரண்டாவது கட்டமாக) | 85.00 | 52,500 | 5000 + 630 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை ரிசர்வ் லைன் ரோடு பாளையங்கோட்டை |
| 2 | அம்பாசமுத்திரம் (நெ) உட்கோட்டத்திற்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் (கடையம் மற்றும் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம்) (இரண்டாவது கட்டமாக) | 76.70 | 48,350 | 5000 + 630 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை ரிசர்வ் லைன் ரோடு பாளையங்கோட்டை |
| 3 | சங்கரன்கோவில் (நெ) உட்கோட்டத்திற்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் (குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம்) (இரண்டாவது கட்டமாக) | 43.80 | 31,900 | 3000 + 378 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை ரிசர்வ் லைன் ரோடு பாளையங்கோட்டை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **<u>தூத்துக்குடி (நெ) கோட்டம்</u>** | | | | |
| 4 | திருச்செந்தூர் (நெ) உட்கோட்டத்திற்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் (திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம்) (இரண்டாவது கட்டமாக) | 60.00 | 40,000 | 5000 + 630 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை எட்டையாபுரம் ரோடு தூத்துக்குடி |
| 5 | கோவில்பட்டி (நெ) உட்கோட்டத்திற்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் (கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்) (இரண்டாவது கட்டமாக) | 42.20 | 31,100 | 3000 + 378 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை எட்டையாபுரம் ரோடு தூத்துக்குடி |
| | <u>விருதுநகர் (நெ) கோட்டம்</u> | | | | |
| 6 | சாத்தூர் (நெ) உட்கோட்டத்திற்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் (வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்) (இரண்டாவது கட்டமாக) | 62.00 | 41,000 | 5000 + 630 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை மதுரை ரோடு விருதுநகர் |
| | **<u>நாகர்கோவில் (நெ) கோட்டம்</u>** | | | | |
| 7 | நாகர்கோவில் (நெ) உட்கோட்டத்திற்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் (ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம்) (இரண்டாவது கட்டமாக) | 53.04 | 36,600 | 5000 + 630 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை பொபது வளாகம் நாகர்கோவில் |
| 8 | குழித்துறை (நெ) உட்கோட்டத்திற்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் (மேல்புறம் ஊராட்சி ஒன்றியம்) (இரண்டாவது கட்டமாக) | 40.40 | 30,200 | 3000 + 378 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை பொபது வளாகம் நாகர்கோவில் |

முன்வைப்புத்தொகைக்காக ஷெடியூல்டு வங்கியிலிருந்து வழங்கப்பட்ட வைப்புத்தொகை ரசீது கேட்பு வரைவோலை மற்றும் அஞ்சலக சிறு சேமிப்பு பத்திரங்கள் முதலியன சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) பெயரில் ஈடு செய்யப்பட்டிருக்கவேண்டும். மேலும் முதிர்வுபெறாத இந்திரவிகாஸ் பத்திரங்கள் முன்வைப்புத்தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளில் வரிசை எண் 3, 5 மற்றும் 8 தவிர மீதமுள்ள வேலைகளுக்கு ஷெடியூல்டு வங்கியிலிருந்து பெறப்பட்ட ரத்து செய்ய முடியாத வங்கி உத்திரவாதம் முன்வைப்புத்தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) பதவி பெயரில் ஈடு செய்யப்படாத முன் வைப்புத்தொகைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன் ஒப்பந்தப்புள்ளியும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் தபால் மூலமாகவோ, கூரியர் மூலமாகவோ, தனி நபர் மூலமாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ கண்காணிப்புப்பொறியாளர் (நெ) திருநெல்வேலி அவர்களின் அலுவலகத்திற்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெறப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாளான 30.12.2004 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். அவ்வாறு உரிய நேரத்தில் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். கூரியர், அஞ்சல் அல்லது தனி நபர் ஆகியோர் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு இத்துறை எவ்வகையிலும் பொறுப்பு ஏற்காது.

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர்கள் (நெ) பதவி பெயரில் அவர்களது எல்லைக்குட்பட்ட அரசு கருவூலத்தில் கட்டணம் செலுத்தி (திருப்பித்தரப்படமாட்டாது) செலுத்துச் சீட்டுடன் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் 27.12.2004 வரை எழுத்து மூலம் நேரடியாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அவரது முகவர் மூலமாகவோ விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி படிவ விலை மற்றும் விற்பனை வரிக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை ஷெடியூல்டு வங்கியிலிருந்து சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) பதவி பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை வடிவத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை | தொகை செலுத்தவேண்டிய கணக்குத் தலைப்பு |
|---|---|
| ரூ.5000 வ. எண் 1, 2, 4, 6 மற்றும் 7<br>ரூ.3000 வ. எண் 3, 5 மற்றும் 8 | 8658 Highways suspense account III Other receipt to the credit of the Divisional Engineer (H) concerned |
| விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ்<br>ரூ.630 வ. எண் 1, 2, 4, 6 மற்றும் 7<br>ரூ.378 வ. எண் 3, 5 மற்றும் 8 | 0040 Sales Tax |

ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவு அஞ்சலிலோ, கூரியர் மூலமாகவோ பெற விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் தமது விருப்பத்தினை எழுத்து மூலம் தெரிவிப்பதோடு ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்குரிய கட்டணத்தை மேற்கூறிய முறையில் செலுத்தி அதற்கான ரசீது மற்றும் அதற்குரிய அஞ்சல் கட்டணம் ஆகியவை அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மேற்கூறிய முறையில் ஒப்பந்தக்காரர்களின் சொந்த பொறுப்பில் அனுப்பிவைக்கப்படும். இதனால் ஏற்படும் காலதாமதத்திற்கு சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) எந்த விதத்திலும் பொறுப்பல்ல.

குறிப்பு

1) இத்துறையில் முதல் வகுப்பு மாநில அளவில் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும்.
2) கண்காணிப்புப்பொறியாளர் (நெ) திருநெல்வேலியோ அல்லது தக்க அலுவலரோ எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது அனைத்தையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க முழு அதிகாரம் உண்டு.

கண்காணிப்புப்பொறியாளர் (நெ),
திருநெல்வேலி–2.